DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.171/2023**
Prosecution witness **PW.5 (LW.10)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Thiruselvam | Caste | : | |
| Father Name | : | Paramasivam | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | 38 |
| Time | : | | | | |

**(A1 to A4 absent. Petition filed and allowed for A1 to A4 . Accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of **24.07.2026**

**24.07.2026 முதல் விசாரணை** :

1. நான் தற்போது சேலாஸ் நேரு நகரில் குடியிருந்து சேலாஸில் விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 29.09.2017 ம் தேதியில் நானும் எனது நண்பரும் சேலாஸிலிருந்து எனது சொந்த விஷயமாக காலை 09.30 மணியிலிருந்து 10.00 மணி வாக்கில் குன்னூர் நோக்கி வந்துகொண்டிருந்தேன். அப்போது காட்டேரியிலிருந்து கிளன்டேல் பிரிவு சந்திப்பில் கொலக்கொம்பை காவல் நிலைய ஆய்வாளர் மற்றும் 2, 3 காவலர்களும் நின்று அங்குள்ள திட்டுக்கு கீழ் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

2. அப்போது நாங்களும் சென்று பார்த்த போது ஒரு டிரங்க் பெட்டி இருந்தது. அதை அந்த காவலர்கள் மேலே எடுத்து வந்து எங்கள் முன்னிலையில் திறந்து பார்த்தார்கள். அந்த டிரங்க் பெட்டிக்குள் மேற்பக்கம் பழைய செய்தித்தாள்களை வைத்து மூடப்பட்டு அதற்கு கீழ் சுமார் 20 கட்டுக்கள் ரூபாய் நோட்டுக்கள் போல ரோஸ் நிறத்தில் ஆங்காங்கு சாயம் பூசப்பட்டு ரப்பர் பேண்ட் போட்டு கட்டப்பட்டு கட்டு கட்டாக இருந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் டிரங்க் பெட்டி மற்றும் 20 ரோஸ் நிறத்திலுள்ள காகித நோட்டுக்கள் மற்றும் செய்தித்தாள்கள் தான் அன்று என் முன்னிலையில்

போலிசார்கள் கைப்பற்றியது ஆகும் (**அந்த கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). (**அந்த டிரங்க் பெட்டியிலுள்ள 20 ரோஸ் நிறத்திலுள்ள காகித நோட்டுக்கள் மற்றும் செய்தித்தாள்கள் அ.சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது நண்பர் யூதா என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – இல்லை.

**மறுவிசாரணை** – இல்லை.

Sd/- Tmt.R.Geetha B.A. B.L.,
Judicial Magistrate (FAC),
Coonoor.